ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# அநந்தாழ்வான் திருமஞ்சனக் கட்டியம்

ஜய விஜயீப$_4$வ நாயன்தே
ஸ்ரீமத்$_3$ராமாநுஜார்யப்ரியதமம் அநக$_4$ம் தத்கடாக்ஷைகபாத்ரம்
தத்தி$_3$வ்யஞாநுஸாராத் அதிவ்ருஷ$_2$ப$_4$கி$_3$ரி ப்ராப்த கைங்கர்ய ராஜ்யம் |
அஜ்ஞாநத்$_4$வாந்தப$_4$ாநும் புருஷ$_2$வர இதி ஸ்ரீயதீந்த்$_3$ரோக்திஸித்$_3$த$_4$-
ப்ரக்$_2$யாதிம் ஸேவிஷீ$_2$ய ப்ரதி$_2$தகு$_3$ணம் அநந்தார்யமாசார்யவர்யம் ||

சித்திரையில் சித்திரைநாள் சிறக்கவந்த பெருமாள்
சீராரும் எதிராசரடி பணியும் பெருமாள்
பத்தியுடன் வேங்கடவர்க்கடிமை செய்த பெருமாள்
பாரோர்கள் தாமுய்ய வந்துதித்த பெருமாள்
நித்தியமும் அத்தாணிச்சேவை செய்த பெருமாள்
நிரந்தரமும் அடியாரை வாழ்வித்த பெருமாள்
எத்திசையும் புகழோங்கி விளங்கநின்ற பெருமாள்
எம்பெருமான் அடியிணைகள் இறைஞ்சிநின்ற பெருமாள்

யதிராசர் பதவிணையை அடைந்துய்ந்த ஆரியர்க்குள்
சதிரான புகழ்பெற்றுச் சகமெங்கும் விளங்க நின்றோய்
எழுசிகரவேங்கடத்தே ஒழிவிலாக் காலமெல்லாம்
வழுவிலாஅடிமைகள் செய்துநின்று புகழ்பெற்றோய்
துதிசெய்து துவளில்லாத் தூமலர்கள் கொண்டு - திரு
வேங்கடமால் திருவுள்ளம் உகக்கநின்ற பெரும்புகழோய்
தூயபுகழ்ச் சடகோபர் நாதமுனி ஆளவந்தார்
தூயமொழி மாலைகளால் துலங்கநின்ற நாவுடையோய்

எதிவரனார் தரிசனமே இவ்வுலகில் எஞ்ஞான்றும்
அதிசயமாய்த் தழைத்தோங்க அருள்செய்த அருங்கலமே
எத்திசையும் ஓங்குபுகழ் ஆழ்வார்கள் அருந்தமிழ்நூல்
நித்தியமும் சிந்தைதன்னில் நிலவநின்ற நிறைபுகழோய்
மதியிலா மானிடரும் மாதவன்தாள் மலரேத்தி
சதிருடனே வாழ்கவென்று சொல்லமுதம் ஈந்தருள்வோய்
மாயாதவகவிருளும் மாய்ந்திடவே வந்துதித்த
மாஞானி அநந்தாழ்வான் மஞ்சனம் கொண்டருளுகவே